

DUPLICATE

புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

பிரோதி ஸு (1889)
ஆவணி மீ ௨௨
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிகை கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

யாழ்ப்பாணப்பட்டினம்:	ஆ க-க்கு	ரூ. உ-உரு.
வெளியூர், இந்தியா:	,,	ரூ. ௩-உரு.
தொலைவாய்ப்பகுதி:	,,	ரூ. ௩-௭௫.

தனிப்பிரதி சதம் -0௫.

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௭-௫0.
,,	அரைக்கலம்	௪-00.
,,	கால்கலம்	உ-௫0.
,,	ஒரு அங்குலம்	-௫0.

அடுத்தமுறைகட்கு இவ் விகிதங்களில் அரைவாசி.

புத்தகம் - உஅ. { யாழ்ப்பாணம்:—நளஸு ஆடிமீ ௨௨௳ ௧௯௧௬-ம்ஆ ஆகஸ்டுமீ ௬. } இலக்கம்—ரு.

௨

கணபதி துணை.

சீர்பூத்த கருவிக லுணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
போர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகன்றன் மலரடி வாழ்த்தாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

THE CHEAPEST HOUSE
FOR HIGH CLASS SILK CLOTHS.

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான
பட்டு வர்த்தகசாலை எது?

காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய
கே. எஸ். முத்தையா கம்பெனியார்
என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக் குட்டைகள், தாவணிகள், பிள்ளை (பாலகர்களு) வேட்டிகள், தலைக்குட்டைகள், நார்மடித் தினிசுகள், வெண்பட்டு தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினுல் இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

K. S. Muthiah & Co.,
"Silk House",
BENARES, CITY.

பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ரு00 ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்.

இடைவிடாது கள்ளுக் கட்டினுல் மரத்துக்குமாம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும் ஆனுல் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம் இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்யவேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து க0,000 கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு றாத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனுல் ஒருறாத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் க0,000 றாத்தல் அல்லது உ00 கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உடுவீமதாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ரு00 ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.

கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த சில்லேபோட்ட கண்ணுடிகளைப்பாவித்துப் பார்வையைக்காப்பாற்றுங்கள்.

திறமான மூக்குக் கண்ணுடிகள்
எங்களிடம்
சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

எம் கல்லேஜா அன் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்.

S. U. N. & Co.
Weaving Silk Manufacturers,
BENARES CITY, U. P.

பெரிய கம்பெனி. நாணயமான சரக்குகள்

இந்தக் கம்பெனியில் சொசுஸாகிற உத்தமமான பனாரிஸ் பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பன்காஞ, காஷ்மீர் போர்வைகள், குஜராத் சங்கள், குழந்தைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய 68 பக்கமுள்ள ஒரு "காட்லாக்"கும் ஒரு கானவைபாவர் சயநும் கோருகிறவர்களுக்கு இனுமாய் அனுப்பப்படும்.

S.U.N.& Co.
BENARES CITY.
KASHI
VISHWESHWAR.

எஸ்.யூ.என். அண்டு கம்பெனி,
பனரீஸ் ஸிட்டி.

பம்பாய்ச சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சாசமானது!!
16 முழ நீளம்.

இந்தச் சேலைகள் கோர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப் பிறை, சந்திரப் பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவைகள்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்திற் தருவித்துக்கொள்ளவும். கொட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற் பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணு 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்ட
தமிழ்ப்புத்தகங்கள்
வண்ணார்பண்ணைச்
சைவப்பிரகாசவித்தியாசாலையில்
விற்கப்படும்.
V. P. போஸ்டில் அனுப்பவேண்டியவர்
தபாற்செலவுமாத்திரம் முற்றி அனுப்பல்
வேண்டும்.

விளம்பரம்.

மிகவும் கீர்த்திபெற்ற
கேசரஞ்சிததைலம்.

இது ரோமத்திலுள்ள சகல ரோகங்களையும் போக்க வல்லது. தலைவலியை நீக்க வல்லது. இந்த அரிய எண்ணெயை உபயோகித்தால் கேசம் ஒருவாரம் ஒரு அங்குல நீளவிகிதம் வளர்ந்து அடர்த்தியாகும். இது குளிர்ச்சியையும் மூளைக்கு ஆறுதலையும் தருமியல்புடையது. ஒரு போத்தல் எண்ணெயின் விலை ரூபா க. தபாற்கூலி அணு ௫.

பிரமேகபிந்து.

இது மேகநோய் காரணமாகவுண்டாகும் சகலவியாதிகளையும் அதிசீவிரைவில் நீக்கவல்லது. இது உண்போரின்கொடிய நோயை நீக்கி அவர்களுக்குத் திடத்தையும் ஆறுதலையும் ஆரோக்கியத்தையுந் தருவது. ஒருபோத்தல் மருந்துக்கும் ஒரு பெட்டி குளிகைக்கும் ஒருங்கு விலை ரூபா க. அணு அ. தபாற்செலவு அணு எ.

"ஹைட்றசீ"லுக்கு விசேஷமருந்து

இம்மருந்து இந்த நோயால் உண்டாகும் உபத்திரவத்தை இலகுவில் மாற்றிவிடும். இது வீக்கத்தை வற்றச் செய்து அவ்வீக்கத்துடன் உண்டாகும் சுரத்தையும் வரவொட்டாது தடுக்கத் தக்கது. இந்நோய் உண்டாகி ஒருவருட காலம் மாத்திரஞ் சென்றிருந்தால் இரண்டு பெட்டி மருந்துடன் நோய் சொஸ்தமாய் விடும். நோய் ஒருவருட காலத்திற்கு மேற்பட்டதாயிருந்தால் கொஞ்சம் கூடிய காலத்திற்கு மருந்து சாப்பிட வேண்டும். இருபெட்டி மருந்தும் ஒருபோத்தல் எண்ணெயும் விலை ரூபா உ. தபாற் செலவு அணு கூ.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய "கற்லக்கு"கள் வேண்டியவர்களுக்கு இனுமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதி யறிவித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொடுவா யிராச்சியம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன்" (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால்
பிரசுரஞ்செய்யப்பெற்றன.

	ரூ. ச.
முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது]	௪0
இரண்டாம் பாலபாடம் … … … …	௧௫
மூன்றாம் பாலபாடம் … … … …	௨0
நான்காம் பாலபாடம் … … … …	௩0
ஐந்தாம் பாலபாடம் … … … …	௪0
ஆறாம் பாலபாடம் … … … …	௫0
ஆத்திசூடி கொன்றைவேந்தன், உரையுடன்	௫
நமச்சிவாயமாலை, உரையுடன் … … …	௫
வெற்றிவேற்கையுரை … … … …	௫
வாக்குண்டாமுரை … … … …	௫
நல்வழியுரை … … … …	௫
நன்னெறியுரை … … … …	௫
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழி பெயர்ப்புடன்)	௧௨
இலக்கண வினாவிடை… … … …	௪0
நிகண்டு ௧௧-வதும் ௧௨-வதும் … … …	௨௫
திருவாதவூரடிகள்புராண மூலம் … …	௨௫
மறைசையந்தாதியுரை … … … …	௧௮
கிருட்டினன்றூது மூலமுமுரையும் …	௫0
திருச்செந்தூர்ப்புராணவுரை (கிளேஸ்காகிதம்) ரூ ௧-௨௫,(நக்காகிதம்)	௧-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் …	௪0
கந்தசஷ்டி கவசம் … … … …	௫
சுப்பிரமணியசுவாமி விருத்தம் … …	௫
ஆறுமுகசுவாமி விருத்தம் … … …	௫
கதிரைமலைப் பேரின்பக்காதல் … …	௪0
கதிரையாத்திரை விளக்கம் … … …	௧௨
பிள்ளையார்கதை … … … …	௧௨
பிரபஞ்சப் பெருவழக்கு … … …	௪0
விவேகாநந்தசுவாமிகள் யாழ்ப்பாணத்திற் செய்த உபந்நியாசம் (ஆங்கிலத்தில்) …	௫
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? …	௪0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) … …	௪
குமணசரித்திரம் " … …	௫
பஞ்சரத்தினத் திருப்புகழ் … … …	௩

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை செயமின்றிக் கொடுக்கப்படும்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
1-௮-16. வண்ணார்பண்ணை.

விஜயசீலமும், உதிரபாசமும்.

வீரசிங்கன் கதையின் ஆசிரியராகிய சி. வை. சின்னப்பா பிள்ளையவர்களால் மேற்குறித்த சிறந்த நவீன கதைகள் தமிழிலே சாதாரண வசனரூபமாக இயற்றப்பட்டுள்ளன.

வேண்டியவர்கள் இதனடியிற் குறிக்கப்பட்ட இடங்களில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சண்முகநாதன் புத்தகசாலை,
வண்ணை - யாழ்ப்பாணம்.

சி. வை. சின்னப்பாபிள்ளை,
வண் கிழக்கு - யாழ்ப்பாணம்.

M. வேலுப்பிள்ளை,
பலசரக்கு வியாபாரி,
பெரியதெரு - கொழும்பு.

இவற்றின் விலை முறையே ரூ 1, ச.62.
தபாற்செலவு முறையே ச 15-ம் 12-ம்.
மேற்படி இரண்டுஞ் சேர்த்து ச. 22

விளம்பரம்.

ஸ்றோர்க்கீப்பர், இ- முகம்மதுக்கரீம், ஆகிய நான் எனதுபெயரை இந்தமாசம், முதலாந்தேதி தொடக்கம், இ- முகம்மது அப்துல்கரீம் என்று மாற்றி, இ-எம்- கரீம், என்னும் கையொப்பத்திற்குப் பதிலாக, கீழே காட்டப்பட்டகையொப்பத்தை வழங்கிவருகிறேன்-

வண்ணார்பண்ணை, இ- எம்- அப்துல்கரீம்
யாழ்ப்பாணம், 28-7-16. E.M. Abdulkarim.

விளம்பரம்.

மட்டக்களப்பு, கல்முனை, திரிகோணமலை டிஸ்திறிக்குகளில் பகிரங்கவேலைப் பகுதியாரின் பாவிப்புக்கு மிகத் திறமான கல்லுண்டை அரிசியும், ஊர் அரிசியும் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடதாசிகள் ஒப்பந்தக் கேள்வி விசாரணைச் சங்கத்தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் ௧௯௧௬-ம் ஆ- ஆகஸ்டுமீ ௧௨௨ மத்தியானம் வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் ௧௯௧௬-ம் ஆ- ஜூலைமீ ௧௪உ வெளிப்பட்ட கவர்ண்மேந்தார் 'கசற்' பத்திரிகையில் பார்த்துக்கொள்ளலாம், அல்லது மட்டக்களப்புப் பிரதான இஞ்சினீருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

குருநாக்கல், புத்தளம், சிலாபம், டண்டகாமம் என்னும் டிஸ்திறிக்குகளின் பகிரங்கவேலைப்பகுதிப் பாவிப்புக்காகத் திறமான கல்லுண்டை அரிசி ௧௯௧௬-ம் ஆண்டு நவம்பர் மாதம் ௧-ந் திகதிதொடக்கம் ஒருவருஷகாலத்திற்குக் கொடுக்கிறதற்கு ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் அரசிறைவருமானத் தலைவருடைய ஆபீசில் ஒப்பந்தக்கேள்வி விசாரணைச் சங்கத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்சொல்லப்பட்டபத்திரங்கள் அரசிறை வருமானத்தலைவருடைய ஆபீசில ௧௯௧௬-ம் ஆ- ஆகஸ்டுமீ ௧௨உ முற்பகல் ௧௨ - மணிக்குமுன் கிடைக்கவேண்டும்-

இன்னும் வேண்டிய விபரங்கள் ஜூலைமீ ௨௮-ந் திகதியின் கவர்ண்மேந்தார் "கசற்" பத்திரிகையில் பார்த்துக்கொள்ளலாம்- அல்லது குருநாக்கல் பிரதான இஞ்சினீரிடம் அறிந்துகொள்ளலாம்-

---

விளம்பரம்.

இரத்தினபுரி, பல்மதுளை, அவிசாவலை, கேகாலை, என்னும் டிஸ்திறிக்குகளின் பகிரங்கவேலைப் பகுதிப் பாவிப்புக்காகத் திறமான கல்லுண்டை அரிசி ௧௯௧௬-ம் ஆண்டு நவம்பர்மீ ௧-ந் திகதி தொடக்கம் ஒருவருஷகாலத்திற்குக் கொடுக்கிறதற்கு ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் அரசிறை வருமானத்தலைவருடைய ஆபீசில் ஒப்பந்தக்கேள்வி விசாரணைச் சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்- மேற்சொல்லப்பட்ட பத்திரங்கள் அரசிறைவருமானத் தலைவருடைய ஆபீசில் ௧௯௧௬-ம ஆண்டு ஆகஸ்டு மீ ௧௫-ந் திகதி முற்பகல் ௧௨-மணிக்குமுன் கிடைக்கவேண்டும்-

இன்னும் வேண்டிய விபரங்கள் ஜூலைமாதம் ௨௮-ந் திகதியின் கவர்ண்மேந்தார் "கசற்" பத்திரிகையில் பார்த்துக்கொள்ளலாம்- அல்லது இரத்தினபுரி பிரதான இஞ்சினீரிடம் அறிந்து கொள்ளலாம்-

---

பத்திரக்கிரய வரவு.

ஸ்ரீ.	ரூ. ச.
சு சுவாமிநாதக்குருக்கள் நீர்வேலி	1-50
P செல்லையர் கோயிலாக்கண்டி	2-25
வே கந்தசாமி கெக்கரியா	3-00
சு நல்லதம்பி வவுனியா	3-25
V வைத்தியலிங்கம் Tabuwana	2 00
V சின்னத்தம்பி வியாங்கொடை	3-25
S வேலுப்பிள்ளை வட்டுக்கோட்டை	28-25
M சின்னப்பு பீராய்க்	2-25
வே க கனகர் நாத்தாண்டி	3-00
கி கதிரேசபிள்ளை கொட்டடி	9-75
K பொன்னம்பலம் கள்ளியங்காடு	2-00
M மாரிமுத்து பண்டாரவளை	3-25

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:- நளஞு ஆடிமீ ௩௧உ.

சிவ பரத்துவம். ௪.

தேவர் முனிவர் கூற்று.

வேதங்களிலே பல திறத்தர்களாகிய தேவர்களுக்கு வணக்கங் கூறப்பட்டுளதாயினும், அவ்வெல்லார்க்கும் மேலவராகிய பரப்பிரமப் பொருளானார் ஒருவர் உளர் என்பது நன்கு நிறுத்தப்பட்டுளது. "கடவுள் ஒருவரே; இரண்டாவதாக ஒருவர் இலர்" என்பது வேதவாக்கியம். இந்தக் கடவுளாவார் யாவரென்பதே நாம் நிச்சயிக்கவேண்டிய விஷயம். இந்த நிச்சயத்துக்குப் பெருந் துணையாயுள்ளது வேதங்களில் பெரிதும் பயின்றுள தேவர் முனிவர்களது வாக்காம்.

பிரமதேவர்கூற்று.

கந்தபுராணம்.

தேவரின் முதல்வராகிச்சிற்குணத்தலைவராகி
மூவரிலுயர்ந்தோராகிமுடிவிலாஒருவராகி
ஓவறவுயிர்கடோறுமுயிரெனவுறைவோராகி
மேவினர்தம்மைத்தேறவிளம்புதிமேலோய்

என்று தக்கன் வினவினபோது,

கன்றிதுமொழிவன்கேட்டிகாரணன்றானும்யானும்
அன்றமரியற்றுமெல்லையழலெனவெழுந்து
வானிற், சென்றதோர்சிவனேயார்க்குமேலவன்
றெளிதி என்றும்

பின்னுறமுடிப்பான்றன்னைப்பிரானெனத்தேற்றுந்தன்மை, என்னெனவுரைத்திமைத்தளங்களைச்சுரரையேனைத், துன்னியவுயிர்கடம்மைத்தொலைவுசெய்திலெனீற்றில், அன்னவனென்னின்முன்னமளித்தவனவனேயன்றோ
என்றும்

அந்தாளொருவனுயிராருயிர்த்தொகையைத்தொன்றான், வந்தவாறெழுகச்செய்துமன்னியே மீட்டுமென்னை, தன்னையாயுயிர்கட்கேற்றதனுமுதலளிக்குமெங்கள், எந்தைதன்செய்கைமுற்றுமிலையெதன்றிசைக்கற்பாற்றோ
என்றும்

செங்கண்மாறன்னைப்பன்னைத்திண்டிதன்மொய்ம்பினல்கி, அங்கண்மாஞாலங்காப்புமளிப்பதுமுதவியாரும், உங்கள்பாலிருத்துமென்றேயுமிருணின்றியற்றினன், எங்காளமுடியுஞ்செய்கையாவதுமில்லைகண்டாய்
என்றும்

உயிருணின்றியற்றலன்றியுற்றநாஞ்செக்ஷயுள்ளரு, மியன்முறைவழாதுகாப்போனிருவிழியகத்துளானான், மயறூழ்பொழுதுநாம்பாங்வந்தருள்செய்வன்றேனும், செயல்புரிதின்றுன்போலவைமொழிசெறிவனன்றே
எனவும்

என்னுறுமெண்ணெயென்னஎறிமணியாவமென்னக், கன்னுறுபோதுசான்றகடியெனச்சலாகைதன்னிற், றன்னுதவரியசோதிதானெனவுலகமெங்கும், உள்ளொடுபுறம்புமாகிஒருமையாற்பரவுமன்றே
என்றும், பிரமதேவர் பற்பல ஏதுக்கள் கொண்டு எடுத்துக் கூறிய விடையால், சிவபெருமான் தாமே எல்லா உயிர்களுக்கும் இறைவர் என்பது நண்பகற்பொருள்போலத் தெள்ளிதின் விளங்கக்கிடக்கின்றது. வேதங்களுக்குத் தலைவராகிய பிரமதேவர் கூற்று இக்காலத்துள்ள கற்பனுசமயிகள் கூற்று நம்மவராற் கொள்ளத்தக்கது என்பதை நமது சமயிகள் சிந்திக்கக்கடவர்.

விட்டுணுமூர்த்தி கூற்று

தேவர்களுட் சிறந்தவராகிய விட்டுணுமூர்த்தி அந்தத் தேவர்களுக்கே சிவபரத்துவத்தை இனிது எடுத்து விளக்கியிருக்கின்றார்.

கந்தபுராணம்.

ஆவிகளொத்துமாகியருவமாயுருவமாகி
மூவகையியற்கைத்தானமூலகாரணமதாகும்
தேவர்கடேவன்,
என்றும்,
ஈறிலாததோர்பரமன்,
என்றும், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்யுமிடத்து,

சூதசங்கிதை.

பவத்தினையஞ்சும்பான்மையோர்க்கின்பப்பயனுறமுத்தியாயதனை, சிவப்புறக்கொடுக்கு முதலுமாயெங்குநிறைந்துறைபொருளுமாய் நிமலத், தவத்தினைவிழைந்தோர்க்கப்பெருந்தவமாய்ச்சமீபமாய்த்தூரமாயெவரு, மூவப்புறச்செய்யுந் தொழிலுடையானுமொளிர்தருநிராமயபோற்றி
என்றும்

தரைபுனலனல்காலம்பரம்பரிதிதண்சுடரோடு பல்லுயிரென், றுரைதருமெண்மூர்த்தங்கொடு நின்றுயுனக்குவேறுயதொன்றில்லாய், புரையறுவிசுவாதீதனே நிமலபூரணபுராணனேதரும, நரைவிடைபோலென்னையுமுருநம்பனே நின்னடிபோற்றி
என்றும் சிவபரத்துவத்தை இனிது எடுத்து விளக்கியதுமாத்திரமல்லாமல் அவர் எடுத்த பத்து அவதாரங்களிலும் சிவபெருமானைப் பூசித்தமையாலும் அவர் எடுத்த இராமாவதாரத்திலே அவராற் பூசிக்கப்பெற்ற இராமலிங்கம் இன்னும் பெரும் பிரஸ்தாபமுடையதாய் சிவபரத்துவத்தை உலகம் அனைத்துக்கும் காட்டிக்கொண்டு விளங்குதலாலும், அவருடைய கிருஷ்ணாவதாரத்திலே அவர் அருச்சுனனுக்குச் சிவபரத்துவத்தை இன்னும் எடுத்து விளக்கி இருத்தலாலும், அந்த விஷ்ணுமூர்த்தியுடைய கருத்து இது என்பது நாம் அனைவரும் நன்கறியக்கிடக்கின்றது.

வேதங்கள் சிவபரஞ்சுடரையே பரம்பொருளாக்கொண்டு துதித்தனவன்றி மற்றைத் தேவர்களை அங்ஙனந்துதித்தில என்பது

காரெழில்புரையுமேனிக்கண்ணனைஎன்னைப் பின்னை, ஆரையும்புகழும்வேதமரன்றனைத்துதித்ததேபோல், ஒருவரைவழங்கிற்றுண்டோஉரைத்ததுமுகமனென்றே, பேருலகறிபமுன்னும் பின்னரும்விலக்கிற்றன்றே

என்று பிரமதேவர் கூறிய கூற்றைக் கந்தபுராணம் எடுத்துக்காட்டுமாற்றாலறிக.

முனிவர் கூற்று.

வேதங்களை எல்லாம்முற்றக்கற்றமுனிபுங்கவராகிய ததீசி முனிவர்

மலரயன்முதலேயாகவரம்பிலாவுயிரைமுன்னம்
தலையளித்துதவுகின்றதாதையாயளித்துமாற்றி
உலகெலாமாகியொன்றாயுயிர்க்குயிராகிமேலாய்
இலகியபரன் என்றும்

புங்கவரெவர்க்குநல்கும்புவிபுகழவிசொன்னாளும்
அங்கியின்முதலும்வேள்விக்கதிபனுமளிக்கின்றானும், சங்கரன்றனேவேதம்சாற்றுமால்
என்றும்

மாலயன்முதலோர்யாரும் வரம்பிலித்திருவையெய்த, மேலைநாளளித்தோன்றானும்விமலனும் வினையோர்க்கெல்லாம், மூலமுந்தனக்குவேறோர் முதலிலாதவனுமெங்கள், ஆலமர்கடவுளன்றி அமரரிலியாவர் என்றும்

ஆதியந்தமிலாதவெம்மண்ணலுக்
கோதுபேருமுருவுமோர்செய்கையும்
யாதுமில்லையிவ்வாற்றினையெண்ணிலா
வேதம்யாதுவிளம்புந்துணிவினல்
என்றும்

அந்தமாதியின்றியேயுயிரெலமளிக்கும்
தந்தையாகியதனக்கன்றிமுழுதநிந்தன்மை
மைந்தராகியமாரான்முதல்வருமையினுல்
எந்தைதன்வயின்றொண்டனலீறுசெயிர்த்தை

என்றும் பெரிது எடுத்து விளக்கிச் சிவபரத்துவத்தைச் சாதித்திருத்தலைச் சைவசமயிகள் சகலரும் கண்டு களிப்பாராக. வேதங்களை ஆராய்தலையே தமது பொழுதுபோக்காகக்கொண்ட இந்தத் தேவர் முனிவர்களது கொள்கை எல்லாம் இங்ஙனமாக இக்காலத்தே எழுந்துள்ள கற்பனுசமயிகளுக்கு வேதத்தின் துணிபு இது என்பது விளங்கிவிட்டதாம்! கலிகாலவிநோதம் இதனின் மிக்கது பிறிதொன்றுண்டாமோ?

இருக்குவேதத்துச் சிவன்.

(ஸ்ரீ காசிவாசி
செந்திநாதையரவர்கள் எழுதியது.)

சிவன் முதலாயினோர் பெயர் வேதத்திற் காணப்படுகின்றனவாவென்று பழங்குடியார் வினவிய வினாவினுட் சிவன் என்னும் பெயர் இருக்குவேதத்திற் கூறப்படுகின்ற தென்பதை மாத்திரம் முதற்கண்ணே பேசுதும்.

இருக்குவேதத்து, ௧0-ம் மண்டலத்து, அ-ம் அநுவாகத்து, ௯௨-ம் சூக்தத்து, ௯-ம் மந்திரம்

ஸ்தோமம் வோ அத்ய ருத்ராய சிக்வஸே க்ஷயத்வீராய நமஸா திதிஷ்டந। யேபி: சிவ: ஸ்வவாஞ்ஏவ யாவபிர்தி வஸ்சிக்ஷதி ஸ்வயசா நிகாமபி:॥

மந்திரப் பதச்சேதம்.

ஸ்தோமம், வ:, அத்ய, ருத்ராய, சிக்வசே, க்ஷயத்வீராய, நமசா, திதிஷ்டந, யேபி:, சிவ:, ஸ்வவாந், ஏவயாவபி:, திவ:, சிசக்தி, ஸ்வயசா:, நிகாமபி:।

மந்திராந்வயம்.

ஏவயாவபி:, யேபி:, ஸ்வவாந், ஸ்வயசா: சிவ:, திவ:, சிசக்தி, வ:, அத்ய, நிகாமபி:,க்ஷயத்வீராய, சிக்வசே, ருத்ராய, நமசா, ஸ்தோமம், திதிஷ்டந।

மந்திரபாஷ்ய திராவிடார்த்தம்.

(1) ஏவயாவபி:=அச்வைரகச்சத்பி:=குதிரைகளோடு வருகின்ற
(2) யேபி:=யை: மருத்பி: சஹ=யாதோர் மருத்துக்களோடு கூட
(3) ஸ்வவாந்=ஞாதிமாந்=பந்துவும்
(4) ஸ்வயசா: = ஸ்வபூதகீர்த்தி: = இயல்பாகிய புகழையுமுடைய
(5) சிவ:=சுககர: பரமேச்வர:=இன்பஞ் செய்பவராகிய சிவன்
(6) திவ:=த்யுலோகாத்=சுவர்க்கலோகத்திலிருந்து (கைலாசத்திலிருந்துவந்து)
(யஜமாநாந்=யாகஞ் செய்யும் எஜமானர்களை)
(7) சிசக்தி=சேவதே=சேவிக்கின்றார் (உதவுகின்றார்);
(ஹே ருத்விஜ:=ஹே இருத்துவிக்குக்களே!)
(8) வ:=யூயம்=நீங்கள்
(9) அத்ய=இன்றைக்கு
(அஸ்மிந் யாகே=இந்த யாகத்திலே)
(10) நிகாமபி:=நியதாபிலாஷை = நியதமாகிய ஆசையினையுடைய
(தை: மருத்பி: சஹிதாய=அந்த மருத்துக்களோடு கூடினவரும்)
(11) க்ஷயத்வீராய = க்ஷிதக்ஷத்ரவே = செயிக்கப்பட்ட வீரர்களையுடையரும்,
(12) சிக்வஸே = ரணேசக்தாய = யுத்தத்திலே ஆற்றலுடையருமாயுள்ள
(13) ருத்ராய—உருத்திரர்பொருட்டு
(14) நமஸா=நமஸ்காரேணசஹ=நமஸ்காரத்தோடுகூடவாதல்
(15) ஸ்தோமம்=ஸ்தோத்ரம்=ஸ்துதியை
(16) திதிஷ்டந—திசத—காட்டுங்கள் (செய்யுங்கள்).

பொழிப்புரை.

"குதிரைகளோடு செல்லும் மருத்துக்களோடு கூடிப் பந்துவும் சுகீர்த்தியுமுடைய சிவபெருமான் கைலாயத்திலிருந்து போந்து யாகஞ்செய்யும் யஜமானர்களுக்கு உதவிபுரிகின்றார்; ஆகலின், இருத்துவிக்குக்களே! நீங்கள் இந்த வேள்வியில் நியதமாகிய பற்றுடைய மருத்துக்களோடு கூடினவரும், சத்துருக்களை வென்றவரும், யுத்தத்திலே வலிமைபூண்டவருமாயுள்ள உருத்திரரை நமஸ்கரித்து ஸ்தோத்திரமுஞ் செய்யுங்கள்" என்றவாறு.

இங்கே ருத்திராயஎன்னும் மொழி உருத்திரர் பொருட்டு எனப் பொருள்பட்டு நான்காம் வேற்றுமையில் நின்றது. இம்மொழிக்கு விசேஷணங்களாய்ப் போந்தன க்ஷயத்வீராய சிக்வசே என்னும் இருமொழிகளுமேயாம். சஹிதாய என்பது பாஷ்யகாரரால் விஷயசம்பந்தம்நோக்கி எடுத்தாளப்பட்டது சிவ: என்னும் மொழி ருத்ராய என்பதற்கு விசேஷணமாய்ப் போந்திலது. அங்ஙனம் அடைமொழியாய்ப்போதருமெனில், அது சிவாய என்று நிலைபெறல்வேண்டும். அங்ஙனம் இல்லாது, சிவ: என்பது எழுவாயில் நின்றது. நிற்கவே, இம்மந்திரம் இரண்டு எழுவாய்களையும் இரண்டு பயனிலைகளையுங் கொண்டு முடிந்தது; எங்ஙனமெனின், முதன்மந்திரபாகத்தில் சிவ: என்பது எழுவாய், இதன்பயனிலை சிசக்தி என்பதாம்; இரண்டாவது மந்திரபாகத்தில் வ: என்பது எழுவாய், திஷ்டந என்பது பயனிலையாம். ஆகவே இம்மந்திரம் இரண்டு முடிவை உடையதாயிற்று. ஈண்டு சிவனும் உருத்திரரும் ஒருவரேயாயினும், பழங்குடியார் கூறியவாறு, சிவ: என்னும்மொழி தனையுள்ளவன் மங்கலமுள்ளவன் எனப்போந்து ருத்ராய என்னும் மொழிக்கு விசேஷணமாய் இயைதற்கு வியாகரணம் இடங்கொடாது என்பது எவர்க்கும் தெற்றெனப் புலப்படும். ஆதலின், சிவ என்பது தனியே பரமேசுவரனை (சிவபெருமானை) உணர்த்தி நின்றவாறு வெள்ளிடைமலைபோல விளங்கக்கிடக்கின்றது. இந்தச் சிவனை வழிபடுவோர் சைவர் எனப்படுவர், அவரது சமயம் சைவசமயம் எனப்படும்.

பழங்குடியாரிடத்தில் ஆங்கிலேய இருக்குவேத மொழிபெயர்ப்பேயன்றி வடமொழி இருக்குவேத மூலமேனும், இருக்குவேத பாஷ்யமேனும் இல்லை என்று அநுமானிக்கப்படுகின்றது. அங்ஙனமிருந்து வடமொழி யுணர்ச்சியிருப்பின், அவ்வாறு தப்புரை பகரத் துணிய மாட்டார். மேலும், மண்டலத்தையும், சூக்தத்தையும், மந்திரத்தையும் முறையே உணர்த்தும் மூன்று இலக்கங்கள்தான் ஆங்கிலேய மொழிபெயர்ப்புப் புஸ்தகத்திற் காணப்படுகின்றன. பழங்குடியாருக்கு 10 92 8 என்னும் இலக்கங்கொண்டு மந்திரப் பொருள் எடுக்க வன்மையுள்ளதாயவிடத்தும், அவ்விலக்கங்கள் எவற்றை உணர்த்தின என்று அறியாதுபோனமை திண்ணம். அங்ஙனம் உணர்ந்திருப்பாரேல், 10 8 92 9 என்றதில் "8 என்ற இலக்கம் என்ன? உமக்குத் தெரியுமா?" என்று புன்னைமாநகரவாசியை நோக்கி வினவியிருக்கமாட்டார், இந்த இலக்கக் குறிப் பறியாதவர்

தாமா சைவத்தைப்பாறச்செய்ய வல்லுனராவர்!! அங்ஙனம் விளுவுமிடத்தும் பழங்குடியார் தாம் அந்த இலக்கக் குறிப்பினை அறிந்தவர்போல, அறிவின நிகழ்த்துகின்றார். ஒர்போது தாம் அவ்விலக்கத்தைத் தவறென்று கூறத்துணியின், சிக்குண்டுபோவேம் என்று கருதியே அங்ஙனம் அறிவின நிகழ்த்தினர்.

ஆங்கிலேயமொழிபெயர்ப்புக்காரர் வேதபாஷ்யத்தைப் பொருட்படுத்தாது சேர்ந்தபடி பொருள் செய்து அவ்வேதப்பொருளைக் கெடுத்தோராயினர். இங்ஙனம் ஆங்கிலேய பண்டிதர்கள் ஆங்கில மொழிபெயர்ப்பில் தவறுபடுகின்றார்கள் என்பதுபற்றி ஜாக்காலியட் (Jaccaliot) என்னும் பிரான்சுப் பண்டிதர் "My complaint against my translators and orientalists while admiring their profound knowledge is that, not having lived in India, they fail in exactness of expression and common expression of the symbolic sense of poetic chants, prayers, and ceremonies, and thus too often fail into material error whether of translation or application". என்று எழுதியிருக்கின்றார். அங்ஙனம் ஒரு ஆங்கிலேய பண்டிதர் பசுபதி என்றதற்கு ஆடுமாடுகளுக்குத் தலைவர் என்று பொருள் செய்தாராம். ஆகவே, ஆங்கிலேய மொழிபெயர்ப்பு பெரும்பான்மையும் தவறுண்டிருக்கின்றதென்பது உறுதியே. மாக்ஸ்முல்லர் (Max Muller) பண்டிதரும் தாம் அநேக இடங்களில் வேதபாஷ்யம் மொழிபெயர்க்குமிடத்து வழுவியிருக்கின்றேம் என்று உணர்த்துவாராய் (Max Muller after working for more than twenty years at his translation of the Rig - Veda, thus writes:— I feel that in many points my translation is liable to correction) என்று கூறியிருக்கின்றார்.

விஷப்பாம்பை நல்லபாம்பு என்றாற்போலச் சங்காரஞ் செய்பவராகிய உருத்திரரை மங்கலகரர் என்றதுமாம் என்றார் பழங்குடியார். யாத்திராகமம் 32-ம் அதிகாரம் 10-ம் வசனம் கூறுமாறு, "என்கோபம் இவர்கள்மேல்மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு" என்று கோபமூண்டு கொலைசெய்யத் துணிந்தவர் நமது உருத்திரரோ? அல்லது அவரது யேகோவாவோ? யாத்திராகமத்து 12-ம் அதிகாரம் கூறுமாறு, எகிப்து தேசத்திலுள்ள தலைப்பிள்ளைகளெல்லாவற்றையும் பலியெடுத்த தெய்வம் நமது உருத்திரரோ? அல்லது அவரது யேகோவாவோ? மத்தேயு 8-ம் அதிகாரத்து 32-ம் வசனங்கூறுமாறு, பன்றிகளை நீரில் அமிழ்த்திக் கொன்றவர் நமது உருத்திரரோ? அல்லது அவரது யேசுக்கிறிஸ்துவோ? அரசனைப்போலக் கடவுள் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்வதை ஆராய்ந்தறியமாட்டாமலும், தம்நூலினும் அங்ஙனம் கூறப்படுவதை அறியமாட்டாமலும், நமது பெருமானை மாத்திரம் தூஷிக்கத் துணிந்தமை யாது நியாயத்தினாலோ? அறிவெம்!

பரப்ரஹ்மணி சர்வேசே மகாதேவே த்ரியம்பகே। நீலக்ரீவே ருதாரக்த போத துக்தாம் புஜேதவே। ருத்ரோ வைதிஷ்டநாம பக்த நாம் தயயாஹ்யசௌ। வர்த்ததே யோகரூடிப் நாம் தத்ராமேதம் சுபாவதே॥

"உருத்திரானவர் தமது அன்புக்கிசைந்த அடியார்களிடத்து தயையினால் அவர்களுடைய துக்கத்தைத் தொலைக்கின்றமையால் அவர் சாக்ஷாத் பரப்பிரமமும், சர்வேசுவரரும், மகாதேவரும், முக்கண்ணரும், நீலகண்டரும், சச்சிதானந்த ஞானமனோதநியும், மகாபரிசுத்தமுள்ளவருமாகிய அப்பரமசிவனிடத்திலே அவ்வுருத்திரர் என்னும் மொழியானது காரணப்பெயராகவும் இடுகுறிப்பெயராகவும் பூரணமாய்ப் பொருந்தி ஏற்பட்டிருக்கின்றது" என்று உபப்பிருங்கணமும் கூறுகின்றது.

துஃகம் த்ராவயதீதி ருத்ர:।

"(ஆன்மாக்கள் வேண்டிய வேண்டியவாறு உதவி, அவர்கள்) கவலையை ஒழித்தலால் உருத்திரர் என்னுந் திருநாமம் போந்தது" என்று தாதுவர்த்தத்தினால் அறியப்படுகின்றது. மேலும், இருக்குவேதத்து 2 4 33 4-ல் உருத்திரர் வைத்தியர்களுக்குள்ளே சிறந்தவர் என்று கூறப்படுகின்றது.

பிஷக்ராஜ் ஞாபகச் சம்பு: சிவ: பரமகாரண।

"பரமகாரணரும், சர்வமுமாகிய சிவபெருமானே ஆஞ்ஞைசெய்பவரும் வைத்தியராயும் உள்ளார்" என்றும்,

சம்சாரஸ் யேசுவரோ நித்யம் சமூலஸ்ய நிவர்த்தக:। சம்சாரவைத்ய இத்யுக்த: சர்வதத்வார்த்த வேதிபி:॥

"சம்சாரத்தை மூலத்தோடு எக்காலமும் நீக்குகின்றவர் சிவபெருமான்" என்றும், அவர் சர்வ தத்துவார்த்தங்களை அறிந்தவராற் சம்சாரவைத்தியர் எனப்படுகின்றார் என்றும் உபப்பிருங்கணம் கூறுமாற்றால், அந்த உருத்திரர் மேலே இருக்குவேதம் கூறியவாறு சம்சார வைத்தியராகிய சிவபெருமானும்.

கிறிஸ்தவருள் ஒருவர் விவிலியநூலுக்கு அவர் கொள்ளுங்கருத்துக்குமாறாக நாம் மற்றோர் பொருள் கூறில், அதனை அவர் அங்கீகரிக்கமாட்டாதவாறுபோல, நமது வேதத்துக்குத் தூர்ப்பொருள் பொதிந்த ஆங்கில மொழிபெயர்ப்பை அங்கீகரிக்கமாட்டேம். பாஷ்யகாரர் கருத்துக்குமாறுபட அங்கங்கே திரிவுப்பொருள் செய்யப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டு நமது சைவசமயத்தை அடியோடு பாறச்செய்கின்றேம் என்று பழங்குடியார் புகுந்தமை ஒருவர் மணற்கயிற்றை நம்பி ஆற்றில் இறங்கினமையை நிகர்ப்பதாகும். உபப்பிருங்கணங்களுக்கு மாறுகப் பாஷ்யகாரர்தாமும் பொருள் செய்யுங்கால் அதனைப் பொருட்படுத்தாத நாங்கள் ஆங்கிலேயர் வேதத்துக்கு மொழிந்த தப்புரையையா நாம் அங்கீகரித்துவிடுவேம். இன்னும் பல பிரகாரமாகச் சிவபெருமானே இருக்குவேத முழுமையும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றார் என்று நிரூபிக்கச் சித்தமாயிருக்கின்றேம்,

திருப்பரங்குன்றம்,
25—7—1916

சமாச்சாரம்.

நல்லூர்க் கந்தசுவாமிகோயில்:—இவ்வாலயத்தில் நாளையத்தினம் துவஜாரோகணமாகி மகோத்சவம் சிறப்புற நடைபெறும். ஆவணிமீ கஉவ ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவமும், மறுத்தநாளாகிய அமாவாசிபுண்ணியதினத்தில் தீர்த்தோத்சவமும் நிகழும்.

மகோற்சவம்:—புன்னாலை யென வழங்கும் தொல்புரம் பொன்னாலை வரதராஜப்பெருமான் கோயிலில் நிகழும் ஆடிமீ உகவ துவஜாரோகணமாகி மகோத்சவம் நடைபெறும். ஆவணிமீ கவ இரதோத்சவம் நிகழும்.

பெருந்தனவந்தரான ஓர் நாட்டுக்கோட்டைச் செட்டியாரின் வரவு:—நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளுள் ஓர் பெருந்தனவந்தரும் அவர்களுள் தலைமை வகித்திருப்பவருமான ஸ்ரீ. சித. சு. ராம. நாராயணன்செட்டியாரவர்கள் சென்றமீ 31வ யாழ்ப்பாணம் வந்தனர். இவர் யாழ்ப்பாணம் றெயில்வேஸ்தானத்தில் வந்திறங்கியபோது செட்டிப்பிள்ளைகளும் வேறு பலபிரபுக்களும் சென்று அவரையழைத்துக்கு பெரும் உபசரணைகள் செய்தனர். ஸ்ரீ. நாராயணன்செட்டியாரவர்கள் காரைக்குடியிலே "தாலூகா போட் மெம்ப"ராகவும், ஹொனரரி மாஜிஸ்றேற்"றாகவு மிருப்பவர். இவரை யாழ்ப்பாணம் இந்துவாலிபசங்கத்தார் சென்ற செவ்வாய்க்கிழமை அழைத்து உபசரித்தபோது அச்சபைக்கு இவர் 250 ரூபா உபகரித்தனர்.

சட்டநிரூபணசபைத் தமிழ்ப்பிரதிநிதி:—இலங்கைச் சட்ட நிருபண சபையிலே தற்போது தமிழ்ப் பிரதிநிதியாயிருக்கும் கௌரவ ஸ்ரீ. அ. கனகசபையவர்களின் உத்தியோககால எல்லை வருகிற டிசம்பர் மாசத்தோடுமுடிகின்றமையால் அவரது இடத்தில் நியமனம்பெறவிரும்பிப் பலரிப்போது வெளிவந்து முயற்சிசெய்யத் தொடங்கியிருக்கின்றனர். டி ஸ்ரீ கனகசபையவர்கள் பின்னரும் தெரிவுசெய்யப்படக்கூடுமாயின் அது சகலருக்கும் சம்மதமான தொன்றேயாகும். ஆனுலிவரையொழிந்த மற்றையவர்களுள் நாமொருவரைத் தெரிவு செய்வித்துக்கொள்ள விரும்பின் அவர்களுள் எவர் நமதுதேச நன்மையின்பொருட்டு அதிகமாக உழைத்திருக்கிறாரோ எவர் அரசியல்விஷயங்களில் அதிகம் பயின்றிருக்கின்றாரோ அவரையே நாம் தெரிவுசெய்வித்துக்கொள்ள முயலல்வேண்டும்.

பரிசளித்தல்:—கோண்டாவிற் சைவப்பிரகாசவித்தியாசாலையில், சிலவாரங்கட்குமுன்னர் நிகழ்ந்த அரசினர் வருடாந்தப் பரீக்ஷையிற் சித்தியெய்திய மாணவர்கட்குப் பரிசளிக்குமாறு சென்ற ஜூலைமீ 26வ புதன்கிழமை மாலை 7-மணிவரையில் ஓர் கூட்டம் கூட்டப்பெற்றது. அதற்கு அவ்வூரில்வசிக்கும் பலபிரபுக்களும் மற்றுமிடங்களிலவசிக்கும் சில பிரபுக்களும் சமுகமாயிருந்தனர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. அச்சபைக்கு ஸ்ரீ. ச. சபாரத்தினமுதலியாரவர்கள் அக்கிராசனம்வகித்தனர். முதலாவதாக டி வித்தியாசாலையின் சென்ற வருட அறிக்கைப்பத்திரம் வித்தியாசாலைப் பிரதமாசிரியரால்வாசிக்கப்பட்டது. பின்னர் சித்தியெய்திய வித்தியார்த்திகட்கு சபாநாயகர்மூலமாகப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. அதன் பின்னர் சில பிள்ளைகள் மனனப் பிரசங்கங்களும் தமிழ் வேதபாராயணமும் வியக்கத்தக்கவாறு செய்தனர். அவைமுடிந்தபின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்போதகாசிரியர்களாகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களும், ஸ்ரீ சி. த. சிதம்பரப்பிள்ளையவர்களும், ஸ்ரீ சி. சோமசுந்தரஐயரவர்களும், பிறக்றர் ஸ்ரீ P. K. சோமசுந்தரமவர்களும், ஸ்ரீ. சு. சதாசிவக் குருக்களவர்களும், சோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலை அதிபர் ஸ்ரீ M. சுவாமிநாதனவர்களும், ஸ்ரீ ஆ-மு சோமாஸ்கந்தபிள்ளையவர்களும், அக்கிராசனாதிபதியவர்களும் வித்தியாசாலையின் கல்விவிருத்தியைப்பற்றிய சில குறிப்புரைகூறியதுமன்றிச் சைவசமயிகள் அனைவரும் தத்தம் பிள்ளைகளைச் சைவ வித்தியாசாலைக்கனுப்பிக் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும், குறித்த வித்தியாசாலையின் கட்டடம் நல்ல நிலையில் இல்லாமையினால் ஓர் கற்கட்டடம் கூடியசீக்கிரம் கட்டிமுடித்தற்கு அங்குள்ள பிரபுக்கள் தங்களாலியன்ற திரவியசகாயம் ஆதியஞ் செய்யவேண்டுமென்றும் நன்கு வற்புறுத்திக் கூறினர். ஈற்றில் டி வித்தியாசாலை அதிபர் ஸ்ரீ. சி. கந்தையபிள்ளையவர்கள் சபாநாயகருக்கும் சபையோர்க்கும் வந்தனங்கூறுதலும் சபை தேவாரபாராயணத்துடன் சம்பூரணமாயிற்று.

ஓர் பெண் இரு குழந்தைகளுடன் கிணற்றில் விழ்ந்தது:—சலட்டியிலே ஓர்நழுவியின்மனைவி தனது புருஷனுடன் பிணக்குற்று தனதுயிரையும் தனதுஇருபிள்ளைகளினுயிரையும் மாய்த்துவிடும் நோக்கமாகக் கிணற்றுள் வீழ்ந்தபோது புருஷன் உடனே கிணற்றுட் குதித்துத் தன் மனைவியையும் பிள்ளைகளையும் மீட்டனன். இப்பெண்ணுக்கு விரோதமாக யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் ஓர் வழக்குக் கொண்டுவரப்பட்டு நடைபெறுகின்றது.

ஞானாபிவிர்த்திச் சங்கம்:—ஆடிமீ உஉ (22-7-16) சனிக்கிழமை சாயந்தரம் 6½ மணியளவில் சிவியாதெரு ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் மேற்படி சங்க 2-ம் வருஷ முதல்மாதாந்தப் பிரசங்கம், நல்லூர் 'உபயவேதாகமபண்டிதரும், வைதிகசைவ உபநியாசகரும், சிவபுராணப் பிரசாரகரும், சைவ சைத்தாந்த கதாப் பிரசங்கியுமாகிய ப்ரஹ்மஸ்ரீ. வே. கனகசபாபதி ஐயரவர்களால்,யாவரும் முக்கியமாகக் கற்றுணரவேண்டியதும் அப்பியாசப்படுத்தவேண்டியதுமான "பக்தி"என்றும் அரியவிஷயத்தைப்பீடிகையாகக்கொண்டு கேட்டோர்க்குத் தெவிட்டாத இன்பமும், பக்தியும், வெருபலன்களும் பயக்குமாறு வெகு சாதுரியமாயும், மாதுரியமாயும் செய்யப்பட்டது. தேவாரபாராயண கீர்த்தனைகளுடன் சங்கம் சுமார் 10 மணியளவில் கலைந்தது.

கடித

பல் வைத்தியம்:—மெஸ் S. C. பத்திரனு என்னும் பல் வைத்தியர் யாழ்ப்பாணத்திலே சிதாரியில் 4-ம் குறுக்குத்தெருவில் ஓர் வைத்தியசாலை திறந்து பல்வைத்தியஞ் செய்துவருகின்றனர்.

சங்கீத கதாப் பிரசங்கம்:—திரிகோணமலையில் ஸ்ரீ விசுவநாதசுவாமிகோயிலிலும், முத்துக்குமாரசுவாமிகோயிலிலும், பத்திரகாளிகோயிலிலும், சைவவித்தியாசாலையிலும் ஸ்ரீ. நாகலிங்கசுவாமியவர்கள், பக்தியின் மிகுந்த கண்ணப்பநாயனார், திருநாளைப்போவார் இவர்களது சரித்திரமும், விருத்த குமார பாலரான சரித்திரமும், விக்கிரகாராதனையின் தத்துவார்த்தங்களும் தேவார திருவாசக சங்கீதபக்கவாத்திய சகிதமாய் அன்போடு கேட்டோர்மனங் களிக்கு ஆனந்திக்குமாறு வேதாந்த சித்தாந்த சமரசமாகப் பிரசங்கித்தனர். கடித.

சக மரணம்:—பங்காளத்தைச்சார்ந்த புருலியா என்னுமிடத்தில் வசித்த காராளிச்சரண் சர்க்கார் என்னும் ஓர் வாலிபன் ஐசுமதி என்னும் ஓர் கன்னிகையை விவாகஞ் செய்துகொண்டு பாங்குரா வென்னுமிடத்துள்ள ஓர் கல்லூரியிற் படித்துவந்தான் சிலவாரங்கட்கு முன்னர் அவன் அக்கல்லூரியிற்றானே பேதிநோய் கண்டு மரணமானான். அதனைக் கேள்வியுற்ற அவன் மனைவியும் உடனே ஒருவருமில்லாத சமையத்தில் தன் உடம்புமுழுவதும் மண்ணெண்ணெயில் நனைத்த சீலையைச் சுற்றி உடனே தீயைமூட்டி எரிந்து மரணமானாளாம்.

புதுவயல் ஞானப்பிரகாசசபை.

திருச்சிற்றம்பலத் திருவருளுடன் திருநடம் பயிலும் இறைவனனுக்கிரகத்தினாலே ஞானத்தை விளக்கும் பெற்றியுடைத்தாகிய இந்தஞானசபையின் இரண்டாம் வருஷத்து முதல் மாசாந்தக் கொண்டாட்டம் சென்ற 32வ ஸ்திரவாசரத்தன்று மாலை 3 மணிக்குமேல் கோநகர் 'வித்யாபாநு' பத்திராசிரியர் பிரமஸ்ரீ எஸ் சாமிநாதையரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. போசம்பட்டி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரஐயரவர்கள் 'அற்ப படிப்பின் விபத்துக்கள்' என்னும் முகநாம விஷயத்தையும், யாழ்ப்பாணம் உடுவில் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வ. மு இரத்நேசுவரையரவர்கள் 'அடக்கமுடைமை என்னும் விஷயத்தையும், ஸ்ரீ கா. நல்லைய ஆசாரியரவர்கள் 'கடவுள்வழிபாடு' என்னும் விஷயத்தையும், ஸ்ரீ மோ. வெ கோவிந்தராஜையங்காரவர்கள் 'சீதையின் தனிமை' என்னும் மகுடநாமங் கொடுத்து ஸ்ரீராமாவதாரச் சரித்திரத்தையும் தத்தம் கலையறிவளவு விரித்துப் பிரசங்கித்தார்கள். தலைவரவர்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு அரிய முடிப்புரை கூறினார்கள். வந்தனோபசாரத்துடன் தமிழ்வேத பாராயணஞ் செய்யப்பெற்றது. ஆரம், சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டன. சபையும் அங்கத்தவர்களும் மங்களம்பெற்று நீடுழிகாலம் நிலவத் திருவருளுண்டாவதாக.

'ஞானாபிவிர்த்திப்பிரியன்'

தந்திச் சமாச்சாரம்.

(யுத்தசங்கதிகள்)

ஜூலை 25வ

ஆர்மீனியாவிலுள்ள துருக்கிச்சேனை பின்காட்டிச் செல்கின்றது. ருஷியர் எர்ஸிஞ்சன் பட்டினத்திலிருந்து பத்துமைல் தூரத்தில் நிற்கின்றனர்.

அவுஸ்திரியாவில் பெண்களும் பிள்ளைகளும், சமரங்களில் வேலைசெய்யவேண்டும். அங்ஙனஞ் செய்யாவிடின், ஒரு வருஷமறியலும் ஒருபவுண் அபராதமும் விதிக்கப்படுமென அரசாட்சியார் விளம்பரப்படுத்தியிருக்கின்றனர்.

சுவீடின் தேச கடலில் அந்நிய தேசத்தவர்களின் சப்மெறயின் கப்பல்கள் காணப்பட்டால் அவைகளைச் சுடவேண்டுமெனச் சுவீடின் தேச இராசாங்கத்தார் தங்கள் சேனைகளுக்குக் கட்டளையிட்டிருக்கின்றனர்

'உ ஆக்ல்' 'லோங்வேன்' 'நர்ஸ்மோர்ட்' என்னும் பிறிட்டிஷ் கப்பல்கள் நீரிலமிழ்த்தப்பட்டன

'ஓலிவ்' என்னும் கப்பல் மத்தித்தரைக் கடலில நீரிலமிழ்த்தப்பட்டது

அமெரிக்க இராசாங்கத்தார் டேன் சாதியாருக்குரிய மேற்கிந்திய திவுகளை ௫0,00,000 பவுண்கொடுத்து விலைக்கு வாங்கியிருக்கிறார்கள்

ஜூலை 26வ

ஜூலைமீ உசவ 'எஸ்திலீன்' என்னுமிடத்துக்குத் தெற்கே பிறிட்டிஷ் சைநியம் சகள பேரைக் கைதிகளாகப் பிடித்தது; உ0ந்தேதி "சொயிகூட்" என்னுமிடத்துக்குத் தெற்கே பிடித்த இடத்தில் ஆறு பீரங்கிகளும் வேறுபல யுத்தக் கருவிகளும் கைவசப்படுத்தப்பட்டன, "புளூஜி" யென்னுமிடத்தில் பெரும் பீரங்கிச் சண்டை நடைபெறுகின்றது.

'எர்ஸிஞ்சன்' என்னுமிடத்தை ருஷியர் கைப்பற்றினர்

பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வேறுபல யுத்தப்பொருட்களையும் விட்டு ஓடும் துருக்கியரை ருஷியர் துரத்திச் செல்கின்றனர்

'ஸ்தோர்' ஆற்றுக்கு வலப்பக்கத்தில் 'சிலோனிக்கா' வென்னுமிடத்தில் ருஷியர் ௪000 பேரைக் கைதிகளாகப்பிடித்தனர் புறாடி என்னுமிடத்துக்குப் பத்துமைல் தூரத்தில் கலிஷியாவில் யுத்தம் நடைபெறுகின்றது.

சுவீடினிலிருந்து இரும்பு ஏற்றிச்சென்ற 'கோர்டினி' யென்னும் கப்பல் போல்ற்றிக கடலில் நீரிலமிழ்க்கப்பட்டது. கப்பித்தானும் கூ பேரும் நீரிலமிழ்ந்திறந்தனர்.

சகலரும் யுத்தத்திற் சேரவேண்டுமென்னும் பிரமாணத்தினின்று ஐர்லாந்துதேசம் நீக்கப்பட்டிருக்கின்றமையால் குடியேற்ற நாடுகளிலிருக்கும் பிறிட்டிஷ்காரரை யுத்தத்திற்குப்போகும்படி பலவந்தப்படுத்தக்கூடாதென எண்ணப்படுகின்றது

ஜூலை 27வ

ஓர் பிரான்சு ஆகாயகமனி ஜூன்மீ உ0வ பேர்லின்நகரின் மேற் பறந்து துண்டுப்பத்திரங்களை வீசிற்று. இப்பத்திரங்களில 'நீங்கள் எங்கள் தேசத்தில் குண்டுகளை வீசிப் பெண்களையும் பிள்ளைகளையும் கொல்லுகின்றீர்கள் நாமிந்தத் துண்டுப்பத்திரங்களைமாத்திரம் வீசுகின்றோம்' என எழுதப்பட்டிருந்தது; இவ்வாகாய கமனி அ00 மைல் வரை பறந்து தமது கப்பல் யந்திரத்தில் ஏதோ பழுதுண்டு ருஷிய யுத்த பூமிக்கு ௬0 மைல் தூரத்திலிறங்கியபோது சத்துருக்கள் கையிலகப்பட்டுவிட்டனர்.

எல்லாப்பகுதியாரும் ஒத்துவராமையால் ஐரிஷ்சட்டம் பாளிமேந்துச் சபைமுன் கொணரப்படமாட்டாதென அஸ்குவித் மந்திரியார் சொல்லினர்.

இராமுழுதும் பீரங்கிச்சண்டைநடந்தது. பலவிடங்களில் பிறிட்டிஷ்சைநியம் கைகலந்துயுத்தஞ்செய்தது. சத்துருக்கள் நச்சுப்புகையை அதிகமாகப் பாவிக்கிறார்கள்.

ஆர்மீனியாவிலிருந்து ஓடும் துருக்கிச் சைநியத்தை ருஷிய சைநியம் துரத்திச் செல்கின்றது.

ஜர்மன் டிஸ்திறோயர்க் கப்பல்கள் ஒரு நோர்வே கப்பலையும் இரண்டு பிறிட்டிஷ்கப்பல்களையும் பிடிக்க, ஒரு ஜர்மன் குரூசர் கப்பல் 'எஸ்கிமோ' என்னும் கப்பலை நீரிலழ்த்திற்று.

'சென்றின் சேர்ண்' என்னும் நோர்வே கப்பல் வடகடலில் நீரிலமிழ்த்தப்பட்டது.

ஜூலை 28வ

'போஸியேர்ஸ் என்னுமிடத்திற்கு வடகிழக்கிலும் லோங் வெல் டெல்வில்காடு என்னுமிடங்களிலும் யுத்தம்முப்முரமாய் நடைபெறுகின்றது.

ஜூலை 29வ

சேர்வியர் புல்கேரியரோடு யுத்தஞ் செய்து அவர்களை கிரேக்க பூமியினின்றுந் துரத்தினார்கள்

ஜர்மனியர் பிடித்த 'பிறசல்ஸ்' என்னும் கப்பற் கப்பித்தானாயிருந்த 'பிறயர்' என்பவர் ஓர் ஜர்மன் சப்மெறயின் கப்பலை நீரிலமிழ்த்திவிட எத்தனித்ததின் நிமித்தம் அவர்களாற் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மூன்று ஜர்மன் ஆகாய விமானங்கள் இங்கிலாந்தின் கிழக்குக் கரையில் நடுச் சாமத்திலே தோற்றி லின்கனசயரிலும் நோவோக்கிலும் கூஉ குண்டுகளை வீசின; கவனிக்கப்படத்தக்க பொருட்சேதம் அல்லது உயிர்ச்சேத முண்டாகவில்லை. அநேக குண்டுகள் கடலில்விழுந்தன. பிறிட்டிஷ் ஆகாயக்கப்பல்கள் எழுந்து அவைகளைத் துரத்தின.

லோங்வெல் என்னுமிடத்தைப்பிடித்தபோது சத்துருக்களுட் பலர் கைதிகளாக்கப்பட்டனர். நாள்முழுதும் போஸியேர்ஷுக்குக் கிட்ட இருபக்கச் சேனையும் கைகலந்து யுத்தஞ்செய்தன. மற்றைய விடங்களில் குண்டுப்பிரயோகம் நடைபெறுகின்றது.

ருஷியர் புறாடி யென்னுமிடத்தைப் பிடித்தனர். லற்ஸ் ஆற்றுக்கு மேற்கேயுள்ள சத்துருக்களின் அணிமுழுவதையு மவர்கள் குலையச்செய்தனர். இங்கே ௬000 பேரும் இரண்டு ஜெனறல்மாரும் பிடிபட, ௪௬ பீரங்கிகள் கைவசப்படுத்தப்பட்டன.

நேற்றுச்சத்துருக்களுள் ௪00 உத்தியோகத்தரும் உ0000 பேரும் பிடிபட, ௬௬ பீரங்கிகள் கைவசப்படுத்தப்பட்டன.

கடிதம்.

பழங்குடியார் தோல்வி.

(முன்தொடர்.)

இனிச் சிவன் என— பழங்குடியார் கூறியவாறு அடைமொழிதானே என்று ஆராய்வோம். அடைமொழி எழுவாய் முதலியவற்றை விசேடித்து வருவதன்றி, தனக்கோர் பயனிலை கொண்டு முடிந்து வருவதன்று "சிவ:" என்பது எழுவாயாய்நின்று "சிசக்தி" என்னும் பயனிலையோடு முடிந்தது. ஆகலால், இதனை உருத்திரனை விசேடித்துவந்தது என்பது அடைமொழி இலக்கணமறியார் கூற்றாமென்க. இன்னும் பழங்குடியார் "வேதத்திலே சிவன் என்ற தெய்வமல்ல வேறு தெய்வங்களே கூறப்பட்டிருக்கின்றன என்பதும், நீவிர் இப்போது ஆற்றுப்பட்சத்தில் அத்தெய்வங்களோடு சிவனைக் கொண்டுபோய் ஒட்டுகிறீர் என்பதும் பிரத்தியட்சம்" என்றார். அங்ஙனமாயின் உருத்திரன், சிவர்க்கர், பர்க்கர், 'பசுபதி'என்னும் பெயருடையதெய்வங்கள் யார் என்றும், அத்தெய்வங்களை வழிபடுஞ் சமயிகள் யார் என்றுங் கூறுவாரா? கூறினுவன்றோ அவர் கூறுவதெல்லாம் உண்மையாகும். சிவனுடைய பரியாயப் பெயர்கள் வருமிடங்கடோறும் அவற்றையெல்லாம் தெய்வங்களாகக் கொள்ளுமிவர்தானோ நம் சமயநிலையை ஆராயத்தக்க அறிவுடையார்?

மேலும், பழங்குடியார் "இருக்குவேதத்தை நீர் கண்ணாலுங் கண்டதில்லை யென்றும், யாரோ உமக்கிந்தச்சுலோகத்தை எழுதிக்கொடுத்துவிட்டார்களென்றும், (10-8-92-9)என்று மேற்கோள்காட்டியதினுலும் தெரிகிறது. 8 என்ற இலக்கமென்ன? உமக்குத் தெரியுமா? என்றார். இவர் அவ்விலக்கக்குறிப்புத் தமக்குத்தெரியாதென்று வந்தாராயின் கீரிமலைச் சிவன்கோயில் ஆதினகர்த்தருள் ஒருவராகிய பிரமஸ்ரீ கா. சபாபதிக் குருக்களிடம் இருக்கும் காகிதலிபியில் வந்திட்ட புத்தகத்திலே யாம் அதனை எடுத்துக் காட்டுவேம்.

மேலும் பழங்குடியார் "ஆர்த்துப் பார்த்து அரும்பிப் பொட்டளிகொண்டு அந்தணர் ஓடுவந்ததுபோல மீண்டு கொண்டோடுதீர்' என்றார். அவர் எம்மைச் சான்றார், கரையார், முக்கியர், அம்பட்டர் போல வந்தீர் என்னாது "அந்தணர் போல" ஓடிவந்தீர் என்றதனால் எமக்கோரிழிவின்றெனவறிக.

புன்னைமாநகரான்.

லீலாசுகர் என்னும் ஓர் பக்தசிரோமணியின் அற்புத சரிதை.

முன்னொரு காலத்தில் வில்வமங்களன் என்னும் ஒரு பணக்கார வாலிபனிருந்தான். அவன் நல்ல குலத்தில் அவதரித்தவன். இப்படியிருந்தும் உலப்பற்ற செல்வப் பெருக்கால் எட்டுணையுங் கவலைதெரியாது வளர்ந்து வந்ததினாலும், பெரியோர்கள் சகவாசமின்றி எஞ்ஞான்றுந் தன்னையக் கருதி முகஸ்துதிபேசிவயிறுவளர்ப்பவர்களாலே, சூழப்பட்டிருந்தமையாலும், இவன் குணம் வாலாமழுக்கமடைந்துகொண்டேவந்து, வேசையர்நேசமும் காலடைவில் புகுந்துவிட்டது. மிக்க தனவந்தனுக்குத் துட்டர்கள் கணமும், வரைவின் மகளிர் விழைதலும், வந்துவிட்டால், காற்றோடு தீயுங் கலந்துகொண்டதுபோலாகும். ஆதலால் வில்வமங்களனது யௌவன பருவமெல்லாம் பரஸ்திரீகமனம், மதுபானம் சூதுமுதலிய தீயவழிகளிலே கழியத்தொடங்கியது. இவ்வண்ணம் நிகழுங்காலத்தில் ஓர்ஞான்று இவன் சிந்தாமணி என்னுங் கணிகைமாதைக் காணும்படி நேர்ந்தது. அவளோ, கண்டோர் மாரன் இல்லக்கிழத்தியாகிய இரதிதேவியோ என்று இயம்பத்தக்க மிக்க வனப்புவாய்ந்தவளாகவும், யௌவன வயசுடையவளாயும், பாட்டு நடனம் முதலிய பரதசாத்திரங்களில் அதிபாண்டித்தியமுடையவளாகவும் இருந்தாள். இவளைக் கண்ணுற்றபொழுதே வில்வமங்களனுக்கு அடங்காக்காதல் உண்டாகிவிட்டது. அவ்வமயத்திற்றானே வில்வமங்களன் சிந்தாமணியின் அடியிணைகளையே புகலிடமாக அடைந்து அவள் இல்லத்தின்கண்ணே பழியாகக்கிடந்துவிட்டான். நாளடைவில் இவன் திரவியமெல்லாம் சிந்தாமணிக்குச் சிறிதுந்தடையின்றி அர்ப்பணஞ்செய்யப்பட்டது. அவள்மாட்டு வில்வமங்களனுக்கு அளவாதமும் காதல்மீதூருந்தன்மையினால், தனது வீட்டுக்குச் செல்லுதைத் தானும் முற்றாக நிறுத்திவிட்டான். இவனுக்கு விருத்தாப்பியதசையை அடைந்த அன்னைதந்தையர் இருவர் இருந்தனர். அவ்விருமுதுகுரவரில் மாதாவானவள் தான் அருந்தவமிழைத்து வயிறுவாய்த்து அரிதினீன்ற தனயனானவன், தாசியர் மயக்கிற் சிக்கித் தங்கள் செல்வங்கள் அனைத்தையும் துர்விநியோகஞ்செய்து, சகித்தற்கரிய குஷ்டரோகம் முதலிய கொடிய நோய்களை ஈட்டிக் கொட்டமியப்போகின்றானே யென்று சிந்தை அலமந்து நெட்டுயிர்ப் பெறிந்து இடையறாது துக்கபாஷ்பஞ் சொரிதலினாலே கண்களில் வலியுண்டாகி நேத்திரங்களை இழந்தனள். தகப்பனோ தனது காண்முளையைத் தாசிகமனத்தில் நின்றும் நீக்கவேண்டிப் பகிரதப் பிரயத்தனங்கள் செய்தும் யாதும் பிரயோசனமின்றிப்போக, மனம்மாழ்கி இன்னலுழந்து நோய்வாய்ப்பட்டு முடிவில் சிவபதமடைந்தனர். தந்தையாரது ஈமக்கடனையியற்றுவதற்கு வில்வமங்களனின்றி யாது செய்வோமென்று அவன்ஞாதியர் துணுக்குற்று, வரும்படி ஆள்விடுத்தும், அவன் வாராமையினாலே, எவ்வண்ணமாவது அழைத்துவரவேண்டுமேயென்று அநேகர் முயன்றனர். அவனுக்கோ சிந்தாமணியைத் தவிர வேறோர் இகபரந் தோன்றாமையினால், அவர்கள்முயற்சிகளனைத்தும்வீணாயின. அவர்கள் அது கண்டு சிந்தாமணிபாற் சென்று முறையீடு செய்தனர். அவள் தாசியானால்தானென்ன இவ்வளவு பெயர்களும் வந்து சிபாரிசுசெய்யும்போது சிந்தை இளகாமலிருக்குமா? உடனே தன் காதலனைப் பிதா வீட்டுக்குத் திண்ணமாயனுப்புகிறேனென்று வாக்களித்தாள். பின் அவள் வில்வமங்களனையடைந்து நடந்த சம்பவங்களனைத்தையும் இயம்பி, உனது தாதையின் ஈமக்கடன்களை முடித்துவிட்டு வருகுதியென மிகுந்த அன்போடு பணித்தனள். காதல் என்னுங் கரைதெரியாத ஆர்கலியின்கண்ணேமூழ்கியிருந்த வில்வமங்களனது செவியில், தன் காதலியின் அரிய மொழிகள் ஒன்றும் ஏறவேயில்லை. உடனே அவள் அடங்காதசீற்றமெய்தி, அவனைப் பிடித்து ஈர்த்து வெளியேதள்ளித் தனது மாளிகையின் வெளிக்கபாடத்தைத் தாளிட்டாள். பார்த்தான் வில்வமங்களன். என்ன செய்வான். வேறு கதியில்லை. தந்தைவீடுசென்று ஈமக்கடன்களை நிறைவேற்றிவந்தால்தான் தன்காதலி சேர்த்துக் கொள்ளுவாளென்று நன்கு அறிந்தான். உடனே உன்மத்தங்கொண்டவனைப்போல மிக்க விரைவோடு வீட்டையடைந்து, கேதத்திற்கு அங்கே வந்திருப்பவர் ஒருவருடைய வதனமும் நோக்காது ஈமக் கிரியைகளைச் செய்யத் தொடங்கினான். அச்சமயத்திலும், அவன் உள்ளமானது சிந்தாமணியிடத்தே பிணிப்புண்டுகிடந்தது. இந்த ஈமக்கிரியைகளை முடித்துஸ்நானஞ்செய்துவிட்டாற், சிந்தாமணிபாலடைந்து ஆனந்திக்கலாமே என்ற எண்ணம் இடையீடின்றி அவன் உள்ளத்திலே உதித்துக்கொண்டிருந்தது. அவன் அக்கிரியைகளை எவ்வளவு துரிதமாக நடத்தியும், மாலைப்பொழுது வரையில் கிரியைகள் முடிந்தில. முடிந்ததும், சட்டி சுட்டதுங் கைவிட்டதுமென்ற கதைபோல சனியொழிந்தது என்று வில்வமங்களன் ஸ்நானஞ்செய்து சிந்தாமணியை எப்போது தரிசிப்பேனென்று சித்தாகுலனாயிருந்தான். அன்று அபரபக்கச் சதுர்த்தசியாதலினால், மாலைப்பொழுதிலேயே மிகுந்த அந்தகாரம் வந்து சூழ்ந்துகொண்டது. அதோடு ஆகாயத்தில் திரண்ட கரிய முகிற்குழாங்கள், பந்திபந்தியாய்ச் சஞ்சரித்து ஒன்றுகூடிப் பரந்தன. மின்னல்கள் விசும்பு எங்கணும், சிறிதுநேரத்துக்கொருதரம் பளீர்என்று வெட்டிமறைந்துகொண்டிருந்தன. அவைகளோடுகூடக் காற்றும் மழையுஞ் சேர்ந்து விட்டன. அப்புத்தேயு வாயு என்னுமூன்றுபூதங்களும், ஏகோபித்துப்பேசிக்கொண்டு பூதலத்தை அதஞ் செய்யப் போந்தனவோ என்று சிந்திக்கும்படி தோற்றியது. இந்த அல்லோல கல்லோலமான சமயத்தில், வில்வமங்களன் பித்துக் கொண்டவனை யானைச் சிந்தாமணி மீது கொண்ட காதலானது பிடர்பிடித்துந்தப் புறப்பட்டு விட்டான். ஒரு கருமத்தில் ஒருவனுடைய சிந்தையானது ஊன்றிப் பாய்ந்துகொண்டிருக்குமாயின் வேறு எந்த உணர்ச்சியுந் தோன்றமாட்டாது. ஆதலால் வில்வமங்களனுக்கு அக்கருக்கல்போதில் நிகழும் பயங்கரமான சம்பவமொன்றும் புலப்படவேயில்லை. வெறி கொண்டவனைப் போல மிக்க விரைவாக வந்து ஓர் ஆற்றின் கரையைச் சேர்ந்தான். அவ்வாற்றின் அக்கரையில்தான், சிந்தாமணியுடைய மாளிகை இருக்கிறது. ஆற்றில் பெரு வெள்ளம் கரை புரண்டு வருவதை நோக்கி வில்வமங்களனுக்கு, இவ்வாற்றை எப்படிக் கடந்து போவது என்றஏக்கம் உண்டாகிவிட்டது. எப்படியாவது இந்த ஆற்றைக்கடந்து அக் கரைபோய்ச் சேரவேண்டுமென்ற திடசித்தம் அவனை விட்டு அகலவில்லை. அவனுடைய அதிஷ்டவசத்தால், தனக்கெதிரில் ஏதோ தண்ணீரில் ஒரு வஸ்து மிதந்து செல்வதைக் கண்ணுற்றான். உடனே இது நல்ல சாவம் என்று தண்ணீருட் குதித்து, அதைமிகுந்த ஆவலோடு பற்றிக் கொண்டு நீந்தி வெகு சீக்கிரத்தில், ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தான். அப்பொழுதே சிறிதுந் தாமசமின்றிச் சிந்தாமணியின் வீட்டின் மருங்கை அணைந்து பார்த்தான். வெளிக் கதவு பூட்டப்பட்டிருந்தது. இடி மின்னல் குமுறலுடனே மேகக் கூட்டங்கள் சோனைமாரியாகப்பொழியும் அந்தகாரஞ் சூழ்ந்த நடுநிசியில், யார்தான் தங்கள் இல்லத்தைத் திறந்துவைத்துக்கொண்டிருப்பார்கள். சிந்தாமணியின் மாளிகையைச் சுற்றியுள்ள மதில்களோ ஏறமுடியாத வெகு உன்னதமாக இருந்தன. நாம் இத்துணை இடர்ப்பட்டு ஈண்டு எய்தியும், எனது அன்பிற்கு உறையுளாகிய சிந்தாமணியைக் காணுதற்கு இடையூறு சம்பவித்துவிட்டதே என உன்னி வில்வமங்களனுக்குப் பின்னரும் ஏக்கம் உண்டாயிற்று. ஆயினும் அவன் மன உறுதியோ அணுத்துணையுங் கெகிழவில்லை. எப்படியாவது உட் பிரவேசித்துவிட வேண்டுமென்று சிந்தனை செய்துகொண்டு, சிந்தாமணியின் மாளிகையைச் சுற்றிச்சுற்றிப் பிரதக்ஷிணஞ் செய்தான். இவ்வாறு சுற்றிக்கொண்டு வரும்பொழுது, ஒரு மதிலின் மேற்புறத்திலிருந்து கயிறு ஒன்று தொங்கிக்கொண்டிருக்கக் கண்டான். கண்டதும் ஆனந்தக்கூத்தாடி, அதைப் பிடித்துக்கொண்டு மதிலிலேறி முற்றத்தில் குதித்துச் சிந்தாமணியின் பள்ளியறைக்குட் புகுந்தான். அங்கு அவள் அந்நேரம் இராப்போசனமருந்தித் தாம்பூலந் தரித்துக்கொண்டிருப்பதைக் கண்ணுற்று, என் ஆசைநாயகியே! நின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, எனது தந்தையாருக் கியற்றவேண்டிய ஈமக்கடன்கள் அனைத்தையும் பூர்த்திசெய்துவிட்டு வந்தேன் வந்தேன் என்று கூவிக்கொண்டே அவளை யணுகினான். இவன் தன்மருங்கணைந்த சமயத்தில் ஏதோ ஒரு துர்நாற்றம் வீசியதைக் கண்டு, சிறிதுஞ் சகிக்கலாற்றாதவளாய், இந்த உக்கிரமான காற்றுமழையில் ஈண்டு எப்படிவந்தாய்? உன்தேகத்தில இத் துர்க்கந்தம் எங்ஙனம் உண்டாயிற்று? என்று வினவினள். அப்போது தான் வில்வமங்களனுக்குத் தன்தேகத்தில் படிந்திருக்கும் துர்நாற்றந் தெரியவந்தது. அந்தத் துர்க்கந்தத்தை அவனாற் கூடச் சகிக்க முடியவில்லை. இது என்னகாரணமோ நான் அறியேன்! உன்மீதிருந்தகாதலினால், ஈமக்கிரியைகள் முடிந்ததும், ஸ்நானஞ் செய்தபின் வீட்டைவிடப்புறப்பட்டு ஆற்றங்கரையை அடைந்து அதை அரிதிற் றாண்டி உன்மாளிகையின் மதிலேறிக் குதித்து இங்கே கடிதின் எய்தினேன் என்றான். அவன்மாற்றத்தைச் செவியுற்ற சிந்தாமணி, மிக்க கதியோடும் பிரவாகித்துச் செல்லும் ஆற்றை எப்படித் தாண்டினாய்? இவ்வுன்னதமான மதிலை எவ்விதம் ஏறிக் குதித்தாய்? என்று மிகுந்த ஆச்சரியத்தோடு பின்னரும் உசாவினள். அதைக்கேட்ட வில்வமங்களன் தான் வருதற்குத் துணைக்கருவியாயிருந்த உபகரணங்கள் இவையிவையென்று சாங்கோபாங்கமாகக் கூறினான். என்வீட்டு மதிலில் உனக்கு யார் கயிறுகட்டியிருந்தார்கள்? அப்படி ஒரு கயிறு தொங்கிக்கொண்டிருந்ததாக எனக்கு ஞாபகமில்லையே! அதனைப் பார்ப்போமென்று புறம்போந்தாள். அப்பொழுது மழையுங் காற்றும் நின்றுவிட்டன. வேலைக்காரன் தீபத்தை எடுத்துக்கொண்டு முன்னே செல்ல, சிந்தாமணியும் வில்வமங்களனும் மதிலைச் சுற்றிப்பார்த்தார்கள். அவன் தான் ஏறிக் குதித்த இடத்தைக் காட்டினான். அங்கு ஒரு கயிறு தொங்கிக்கொண்டுதானிருந்தது. அதைச் சமீபித்து உற்றுநோக்குகையில், ஒரு கிருஷ்ண சர்ப்பம், அம்மதிலிலுள்ள வளையில் இரையை விரும்பித் தன்னுடைய தலையை அதற்குள் நுழைத்துக்கொண்டமையால், அதினுடைய உடல் வெளியே தொங்கிக்கொண்டிருந்தது. கண்டவுடனே சிந்தாமணி சிந்தை அலமந்து மெய்நடுக்குற்று, அந்தோ! என்னகாரியஞ் செய்தனை! அணுத்துணை தப்பினால், இதுகாறும் மரணஞ் சம்பவித்திருக்குமே! தங்கள் அரிய உயிரை வெறுத்து இச்செயற்கருஞ் செய்கையைப் புரிந்தவர்களும் உலகத்திலுண்டா? என்று வெருவினள். அதன் பின்னர் ஆறுகடந்துவந்த வஸ்துவைப் பார்க்க வேண்டுமென்று இருவரும் ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். அங்கு உருச்சிதைந்து அழுகிய பிணமொன்று கரையில் ஒதுக்கப்பட்டிருந்தது. அதினின்றுவீசுந் துர்நாற்றம், இந்த வில்வமங்களன் உடம்பிலிருந்து வீசும் துர்க்கந்தத்தை ஒத்திருந்தது. அதைக் கண்ணுற்ற சிந்தாமணியானவள், இந்த அழுகிய பிணத்தைப் பற்றிக்கொண்டா இவ்வாற்றைக் கடந்துவந்தாய்? அப்பனே! எக்குலத்தவராயினுந் தாரதம்மியம் பாராது, பொருள் வருவாயை மாத்திரம் முழு நோக்கமாகக் கருதிக் கலக்கும் கணிகையாகிய என்னிடத்தில் உனக்கு இவ்வளவு காதலா இருக்கின்றது. காற்று, மழை, இடி, மின்னல், பிணம், சர்ப்பம், இவைகள் அனைத்தும் உன் காதலின் முன்னே ஒரு பொருட்டாய்த் தெரிந்திலவே! காணே செய்நன்றி மறந்த எளிய வேசி! உன் முழு அன்பையும் என்மாட்டு நீ எப்படிச் செலுத்தலாம். இவ்விதமான எல்லையற்ற மனப்பற்றுக்கு நாயினுங் கடையேனாகிய தமியேனால் என்னகைமாறுபுரியமுடியும். நிரயத்துக்கு வழிகாட்டியாயிருக்கும் பாதகியாகிய என்மாட்டுள்ள காதலின் லவலேசத்தை, அகில புவன சராசரங்கள் அனைத்தையும் படைத்துக்காத்தழிக்கின்ற பரமபதியின் பாதசரோருகங்களில் வைத்திருந்தால் அப்பொழுதே அவர் பிரத்தியட்சமாக வெளிப்பட்டுக் கிருபை செய்தருளுவர். கணப்போதிற் றோன்றி மறையுஞ் சிற்றின்பத்தைச் சாதமென்று நம்பி அருமையான காலத்தை அவத்திலே போக்காதீர். கூற்றுவன் பாசகரனாய்ப் பின்னேநிற்கின்றான். ஏமாந்து போகாதீர். 'மூர்த்திர்! மூர்த்திர்!!' என்று இடித்துக் கூறினாள். அவள் இயம்பிய வாக்கானது, வில்வமங்களனது உள்ளத்தில் பசுமரத்தாணி அறைந்தது போல நன்றாகப்பதிந்துவிட்டது. அவன் சிறிது நாழிகைவரையில் ஐம்புலச் சேட்டைகள் அற்றுத் திருவருள்வசத்தனாய் அசையாது ஒரு ஸ்தம்பம் போல நின்றான். பின்னர், சிந்தாமணியை விழித்து நீ கூறிய மாற்றங்கள் யாவும் வாய்மையேயென வெகு உருக்கமாக இயம்பி அங்குநின்றும் ஓட ஆரம்பித்தான். சிந்தாமணி அவனைத் தடுப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்தும் முடியவில்லை. அவள் மாளிகையினின்றும் புறம்போந்த வில்வமங்களன், தான் அநேககோடி சென்மங்களில் ஈட்டிய நல்வினைப் பயனானது கைகூடிவரப்பெற்றமையால், சோமகிரிநாதரென்னும் ஓர் ஞான சற்குருவை எதிரே கண்ணுற்றான். கண்டமாத்திரத்தே, தரிசனவேதி யென்னும் மூலிகையின் முன்னரே எதிர்ப்பட்ட இரும்பானது தங்கமானாற்போல, இவனை முன்னரே பக்தித்திருந்த பாசபந்தமென்னுந் திமிரம் நீங்கப்பெற்று மிகுந்த ஆசையினாலே அவருடைய பாதசரோருகங்களில் அடியற்ற மரம் போல வீழ்ந்துவணங்கினான். அவர் இவனுடைய பக்குவநிலையை உணர்ந்து, குழவிப்பருவத்தில் க்ஷீரவாரிதியைப் பருகிய உபமன்னியுமகாரிஷியிடத்தில் திருவடி தீக்ஷை பெற்றவரும், சிவனடியாருக்குள் முதலடியாராகிய விஷ்ணுமூர்த்தியின் அவதாரத்தரும், அருச்சுனனுடைய சிவார்ச்சனைக்குச் சிவலிங்கமூர்த்தமாய்எழுந்தருளியிருந்தவருமாகிய, ஸ்ரீகிருஷ்ணபக்தியை உபதேசித்து லீலாசுகர்என்னுந் திருநாமத்தையுஞ் சூட்டியருளினார். பின்னர் அவர் கிருஷ்ண லீலைகளிலே ஈடுபட்டு, அநவரதமும் ஸ்ரீகிருஷ்ண உபாசனையே செய்துவந்தார். அவ்வண்ணம் புரிந்துவரும் நாளில், லீலாசுகருக்கு நாமகள் கடாக்ஷம் பூரணமாகவுண்டாகப்பெற்றுத் தேவநாகரத்தில் கவிபாடுஞ் சக்தியையடைந்து, 'கிருஷ்ணகர்ணாம்ருதம்' என்னும் அரிய நூலைச் செய்தருளினார். அதினுடை மகத்துவத்தை ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேடனே சொல்ல அசக்தனாயின், எப்போலியர் எடுத்துக்கூறுமாறு எங்ஙனம். அவர் அந்த நூலில் அநேக இடங்களில் சிந்தாமணி என்னுந் தாசியையே தனது முதற் குருவாக எடுத்துத் துதித்திருக்கின்றார். இப்படியே அவர் அல்லும் பகலும் கிருஷ்ணபக்தி செய்துவந்த விசேடத்தினால், அட்டமாசித்திகளும் எய்தப்பெற்று ஓர் சீவன்முத்தராகி முடிவில் நித்தியானந்த நிரதிசயஇன்பமாகிய முத்தி நிலையை அடைந்தார்.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

விளம்பரம்.

அனுராசபுரம், மிகிந்தலை, மருதங்கடவை டிஸ்திறிக்குகளின் பகிரங்கவேலைப் பகுதியாரின் உபயோகத்திற்காக திறமான கல்லுண்டை அரிசியும் சவர்அரிசியும் 1916 ம் ஆ நவம்பர்மீ 1ம்வ தொடக்கம் ஒருவருஷ காலத்திற்கு கொடுக்கிறதற்கு ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் அரசிறை வருமானத் தலைவருடைய ஆபீசில் ஒப்பந்தக் கேள்வி விசாரணைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங்கள் மேற்சொல்லப்பட்ட ஆபீசில் 1916 ம் ஆ ஆகஸ்டுமீ 15ம்வ முற்பகல் 12 மணிக்குமுன் கிடைக்கவேண்டும்.

இன்னும் வேண்டிய விபரங்களை ஜூலைமீ 21வ வெளியான "கவண்மேந்துக் கசற்" பத்திரிகை மூலமாய் அறிந்துகொள்ளலாம். அல்லது அனுராசபுரம் பிரதான இஞ்சினீரிடம் அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

௧௯௧௬ம் ஆ நவம்பர்மீ ௧வ தொடக்கம் ஒரு வருடத்திற்கு: கண்டி, கட்டுகாஸ்தோட்டை, மாத்தளை முதலிய டிஸ்திறிக்குகளில் பகிரங்க வேலைப் பகுதியாரின் பாவிப்புக்கு மிகத் திறமான கல்லுண்டை அரிசி கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடதாசிகள் ௧௯௧௬ம் ஆ ஆகஸ்டுமீ ௧௫வ மத்தியானம்வரைக்கும், ஒப்பந்தக் கேள்வி விசாரணைச் சங்கத் தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் இந்தமீ ௧௪வ வெளிப்பட்ட கவண்மேந்தார் 'கசற்' பத்திரிகையிற் பார்த்துக்கொள்ளலாம். அல்லது கண்டிப் பிரதான இஞ்சினீரிடம் எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

௧௯௧௬ம் ஆ நவம்பர்மீ ௧வ தொடக்கம் ஒரு வருடத்திற்கு: வவுனியாவிலும், மன்னாரிலுமுள்ள பகிரங்கவேலைப்பகுதியாரின் உபயோகத்திற்காக முதற்றரமான கல்லுண்டை அரிசி அல்லது முதற்றரமான வெள்ளரிசி தருவிக்க விரும்புவோரிடமிருந்து, இன்றுதொடக்கம் ஆகஸ்டுமீ ௧௫வ மத்தியானம் ௧௨ மணிவரையும் அரசிறை வருமானக் கந்தோரில் ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் ஒப்பந்தக் கேள்விச் சங்கத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

இதைப்பற்றி வேறு விபரங்கள் அறியவிரும்புவோர் ஜூலைமீ ௨௪வ வெளிவந்த கவண்மேந்து 'கசற்' பத்திரிகையிலாவது வடமாகாணப் பிரதான இஞ்சினீரிடமிருந்தாவது அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

கூறைச் சேலைகள்:—கும்பகோணம், தஞ்சாவூர் பட்டுச்சேலைகள், மதுரை கோயம்புத்தூர் சருகைச் சால்வைகள் மாத்திரம் கையிருப்பைக் குறைப்பதற்காக ரொக்கத்திற்கு வாங்குபவர்களுக்கு வருகிற புரட்டாசிமாசம் வரையும் புடவைகளில், குறித்த விலையிலிருந்து நூற்றுக்கு ஐந்து வீதம் கழித்து எங்கள் பெரியகடைச் சாய்ப்புகளில் மாத்திரம் விற்கப்படும்.

JAFFNA TRADING COY., LTD.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கோர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்ப ஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௩.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.
௨௨ நாள் மருந்தின் கிரயம் ரூ ௨, அணா ௮,

3 பிரமேக வியாதிக்குச் சத்துச் செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்தஇடத்திலும் நடிக்குந் தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டீபம், ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.
௧௪ மாத்திரை புட்டி ஒன்று ரூ ௧, அணா ௮.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகநோயுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௨௨ நாள் மருந்து ரூ ௨.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஒளடதம்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூ ௧, அணா ௮.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.
௨௨ நாள் மருந்து ரூ ௨.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.
டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 1 க்கு ரூ 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகநோயால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் ௬ வேளையிற் குணமாக்கும்.
டப்பி ௧-க்கு அணா ௪. டஜன் ௧-க்கு ரூ ௨, அ. ௮.

எவ்வித மருந்துகளும உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறாதீர்கள்! இதுசமையம்!! தவறாதீர்கள்!!!

உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(௧) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(௨) ௧. ஆயுட்பாகம், ௨. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முனனு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம் கிட்டுமா, ௧௦. கடன் எப்போது நிவிர்த்தியாகும, ௧௧. விவகாரம ஜெயமாகுமா, ௧௨. நினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ ௧.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
௧௨ பாகம் சார்ஜ் ரூ ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கியாட்லாக்" இனாமாக அனுப்புவோம.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்,
பேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்
றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி
விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and Published by S. Kandiah Pillai for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.